இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 19-10-2023

# ‘இந்தியா’ பாராட்டிய தமிழ்நாடு

திராவிட முன்னேற்றக் கழக மகளிரணி சார்பில் – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஏற்பாட்டில் நடந்த மகளிர் உரிமை மாநாட்டில் இந்தியா முழுவதும் இருந்து வருகை தந்த பல்வேறு கட்சித் தலைவர்கள், தமிழ்நாட்டைக் கொண்டாடினார்கள்.

**திராவிட இயக்கம் - தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா - தமிழினத் தலைவர் கலைஞர் - திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோரை பாராட்டிப் பேசினார்கள். இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் ஆட்சியாக தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சி அமைந்திருந்ததையும் - இப்போது மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது ஆட்சி நடைபெற்று வருவதையும் மனப்பூர்வமாக வழிமொழிந்திருக்கிறார்கள்.**

அன்னை சோனியா காந்தி அம்மையார் பேசும்போது, “பெண்களின் முன்னேற்றத்திற்கு அண்ணா, கலைஞர் அரசுகளே முன்னெடுப்புகளை மேற்கொண்டன. இந்தியாவுக்கே அண்ணா, கலைஞர் ஆட்சிகள் ஒளி விளக்காக திகழ்கின்றன. ஐந்து முறை முதலமைச்சராக இருந்த கலைஞர் ஆட்சியில்தான் காவல் துறையில் பெண்கள் நியமிக்கப்பட்டனர். இன்று காவல்துறையில் நான்கில் ஒரு பங்கினர் பெண் காவலர்கள் தி.மு.க. ஆட்சியில்தான் இருக்கிறார்கள். அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. பெண்கள் முன்னேற்றத்திற்கு தி.மு.க. அரசு கொண்டுவந்துள்ள திட்டங்கள் ஏராளம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் தாய்சேய் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது” என்று வரிசையாக அடுக்கினார்.

ஜம்மு – காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முஃப்தி பேசும் போது, “இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் என தி.மு.க. அரசின் திட்டங்கள் மகத்தானவை. கட்சி, மதம் என பாரபட்சமின்றி அனைவருக்கும் பொதுவாக மகளிர் நலதிட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி வருகிறது. பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் என்பது பெண்களுக்கு ஒரு மிகப்பெரிய கொடையாகும். பெண் சிசு கொலை, பாலியல் தொல்லை, குடும்ப வன்முறை, வரதட்சனை என பல்வேறு அடக்கு முறைகளை பெண்கள் சந்தித்தனர். பெண்கள் சந்தித்த அனைத்து அடக்கு முறைகளுக்கும் எதிராக குரல் கொடுத்தவர் கலைஞர். அவர் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார்” என்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி பேசும்போது, “நூறு ஆண்டுகளுக்கு முன்பே தந்தை பெரியார் ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்ற புத்தகத்தை எழுதினார். சமூக மாற்றத்திற்கான புரட்சி இங்கே தான் உருவானது. ஆனால் நூறு ஆண்டுகளுக்கு பிறகும் இப்போதும் பெண் ஏன் அடிமையாயிருக்கிறாள் என்றே கேட்கும் நிலை உள்ளது. சமூக, பொருளாதார அடிப்படையில் பெண்கள் அடிமையாக்கப்பட்டதற்கு எதிராக ஏராளமான கட்டுரைகளை எழுதியவர் பெரியார். அவர் வழியில் அண்ணா, கலைஞர் ஆகியோர் பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தனர். சமூக மாற்றத்திற்கான புரட்சி தமிழ்நாட்டில்தான் உருவானது” என்று குறிப்பிட்டார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சுபாஷினி அலி பேசும் போது, “சுதந்திரத்திற்கு முன்பே மனுவுக்கு எதிராக குரல் கொடுத்த இயக்கம் தமிழ்நாட்டின் நீதிக் கட்சி ஆகும். சமத்துவத்திற்கான போராட்டம் தமிழ்நாட்டில் தான் துவங்கியது. அதனை வழி நடத்தியவர் பெரியார். 1954ம் ஆண்டு தமிழ்நாட்டில் தி.மு.க. நடத்திய இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நான் நேரில் பார்த்திருக்கிறேன். பெண்களுக்கு சொத்தில் உரிமை உள்ளிட்ட பல அரிய திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.க.அரசு தான் கொண்டு வந்தது. சமூக நீதி, பாலின நீதி, பொருளாதார நீதி ஆகியவை மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானது. சமத்துவ முழக்கத்திற்காக ‘முரசொலி’யைக் கொண்டு வந்த மிகச்சிறந்த பத்திரிகையாளர் முத்தமிழறிஞர் கலைஞர்” என்று குறிப்பிட்டார்.

தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே, “பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்களை நினைவு கூர்ந்து என் உரையை துவக்குகிறேன். தமிழ்நாட்டின் உரிமைக்காக தமிழின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் தி.மு.க. எப்போதும் குரல் கொடுத்து வந்திருக்கிறது. கூட்டாட்சிக்காக தமிழ்நாடு குரல் கொடுத்து வருவதை பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். தமிழுக்கும் மராட்டிக்கும் இரண்டு ஒற்றுமைகள் உள்ளன. ஒன்று தமிழிலும் மராட்டியிலும் ல, ள, ழ உள்ளன. இது மிகச் சிறப்பு. இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டங்களில் மிகவும் சிரத்தையுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பது பாராட்டுக்குரியது. தமிழ்நாட்டில் பெண்கள் நலனுக்காக நிறைவேற்றி வரும் திட்டங்களுக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை பாராட்டுகிறேன்” என்றார்.

இந்திய கம்யூ. கட்சியின் ஆனி ராஜா பேசும்போது, “மக்களுக்கான நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் சிறப்பான வெற்றி கண்டவர் கலைஞர். பாலின சமத்துவம், மகளிர் உரிமைக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் ரெட் சல்யூட். கலைஞர் நூற்றாண்டு விழா மட்டுமல்ல, அவரது வாழ்க்கையே கொண்டாடப்பட வேண்டிய விழாதான். பெண்களின் முன்னேற்றத்திற்காக ஏராளமான உரிமைகளை கலைஞரும் தி.மு.க.வும் பெற்றுத் தந்திருக்கிறது” என்றார்.

சமாஜ்வாதி கட்சி எம்.பி.யான டிம்பிள் யாதவ் பேசும்போது, “தமிழ்நாட்டின் சிறந்த அடையாளமாக திகழ்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். சுதந்திர தின விழாவில் மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியேற்றும் உரிமையை பெற்றுத்தந்தவர். பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை அதிகரித்தவர். சமூக நீதிக்காக இடைவிடாத போராட்டம் மேற்கொண்டவர். மகளிர் உரிமை, பாலின சமநிலை, பெண்களுக்கு சொத்தில் உரிமை என பல்வேறு திட்டங்களிலும் சமாஜ்வாதி கட்சி அரசுக்கு தமிழ்நாடுதான் முன்மாதிரி. பெண்கள் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்திலும் தி.மு.க. தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது” என்றார்.

பீகார் அமைச்சர் லெஷி சிங் பேசும் போது, “தமிழ்நாட்டைப் போலவே பீகாரிலும் மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை நிதிஷ் குமார் அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் கலைஞர் ஆட்சிக்காலத்தில் பெண்கள் வளர்ச்சிக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தினார்” என்றார்.

திரிணாமூல் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுஷ்மிதா தேவ் பேசும் போது, “தமிழ்நாட்டில் மிக நீண்ட காலம் முதலமைச்சராக இருந்தவர் கலைஞர். சமூக நீதி, சமத்துவத்திற்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் கலைஞர். மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாட்டின் தி.மு.க. அரசு முன்னணியில் உள்ளது” என்றார்.

**இப்படி ஒட்டுமொத்த ‘இந்தியா’வும் தமிழ்நாட்டுக்கு எடுத்த பாராட்டுவிழாவைப் போல அமைந்திருந்தது மகளிர் உரிமை மாநாடு.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2023) “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காகச் செல்லும் வழியில், செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள வருகை பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி உதயா கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2023) “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காகச் செல்லும் வழியில், செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு வருகை தந்துள்ள பொதுமக்களிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி உதயா கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சிவகங்கை மாவட்டத்தில்
# பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகள்!
### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

*சிவகங்கை, அக். 19-*

*சிவகங்கை மாவட்டத்தில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகள் 4270 மாணவர்களுக்கும், 6273 மாணவிகளுக்கும் மொத்தம் 10593 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.*

*இதில் 68 அரசு மேல்நிலைப் பள்ளிகள், 105 அரசு உதவி பெறும் மேல்நிலை உதவி பெறும் பள்ளிகள் ஆக மொத்தம் 173 பள்ளிகளுக்கு மிதிவண்டிகள் 2022 - 2023 ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான 2023 - 2024 மிதிவண்டிகளும் விரைவில் வழங்கப்பட உள்ளது.*

*சிங்கம்புணரி ஒன்றியம் பிரான்மலை பாரிவள்ளல் மேல்நிலைப் பள்ளி கிருங்காகோட்டை மேல்நிலைப் பள்ளியில் 107 மிதிவண்டிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கி சிறப்புரையாற்றினார்.*

*இந்த நிகழ்ச்சிக்கு தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை தலைமை தாங்கினார்.*

*நிகழ்ச்சிக்கு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னிலை வகித்தார்.*

*நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து, பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து, துணைத்தலைவர் இந்தியன் செந்தில், ஒன்றியச் செயலாளர்கள் பூமணி கே.பால சுப்பிரமணியன், சிவபுரி சேகர், மனோகரன், பாஸ்கரன், புகழேந்தி, பேரூர் கழகச் செயலாளர் கதிர்வேல், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், வட்டாட்சியர் சாந்தி உட்பட அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.10.2023) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து, “மகா கவிதை” நூல் வெளியீட்டு விழா தொடர்பாக கலந்துரையாடினார்.

## இந்தியாவுக்கே வழிகாட்டும் ‘திராவிட மாடல் அரசு’
# பெண்களின் ஆதரவு இந்தியா கூட்டணிக்கு வெற்றியை அளிக்கும் என்பது உறுதி!
### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, அக். 19-*

*அகில இந்திய அளவில் மகளிர் முன்னணித் தலைவர்களை எல்லாம் அழைத்து தி.மு.க. மகளிரணி சார்பில் சென்னையில் கூட்டப்பட்ட மாநாடு பாராட்டத்தக்கது. இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்பது பற்றிச் சிந்தித்து கருத்துப் போர் நடத்தியவர் தந்தை பெரியார் என்று பிரியங்கா காந்தி குறிப்பிட்டது வரவேற்கத்தக்கது. பெண்களுக்குச் சொத்துரிமை அளித்தது தி.மு.க. அரசும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அரசுமே! 2024 மக்களவைத் தேர்தலில் 50 விழுக்காடுள்ள பெண்களின் வாக்கு “இந்தியா கூட்டணிக்கு” மகத்தான அளவில் கிடைக்கும். இந்திய கூட்டணிக்கு வெற்றி உறுதி என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*மகளிர் நம் நாட்டு மக்கள் தொகையில் சரி பகுதியினர்.*

*140 கோடி இந்திய மக்கள் தொகையில் 70 கோடி பேருக்கு மேற்பட்டவர்கள்.*

*வாக்களிக்கும் வாக்கு வங்கியிலும் அவர்கள் 50 விழுக்காட்டினர்.*

*என்றாலும், அவர்களுக்குரிய பாலியல் நீதியோ, சமூக நீதியோ, உரிய வகையில் போதிய அளவில் (ADEQUATE) இந்த 75 ஆண்டு சுயராஜ்யத்தில் கிட்டவில்லை.*

**பெண்களுக்கு சொத்துரிமை சட்டம் வந்தது எப்போது?**

*புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் பெண்களுக்கான சொத்துரிமை சட்டத்தை நிறைவேற்ற விடவில்லை அதனாலேயே அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலகி வெளியேறினார். பிறகு 2005இல் தி.மு.க. பங்கேற்ற காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அமைச்சரவையில் தி.மு.க.வின் பேராதரவுடன் அந்த சொத்துரிமைச் சட்டம் பெரியார் அம்பேத்கர் விழைவு சட்டமாகி செயலுருக் கொண்டது வரலாறு.*

*அதற்கு முன்பே முதலமைச்சர் கலைஞர் தமிழ்நாட்டில் மகளிருக்கு சொத்துரிமை சட்டம் கொணர்ந்து நிறைவேற்றி தந்தை பெரியாரின் செங்கற்பட்டு சுயமரியாதை மாகாண மாநாட்டின் தீர்மானத்தை மகளிர் பயனுறு உரிமைச் சட்டமாக்கினார்.*

**இந்தியாவுக்கு எப்பொழுதும் வழி காட்டுவது ‘திராவிட மாடல்’ அரசே!**

*இந்தியாவுக்கே எப்போதும் வழிகாட்டும் கலங்கரை விளக்கு தமிழ்நாட்டின் ‘திராவிட மாடல்’ ஆட்சிதானே!*

*ஆனால் “நாரி சக்தி கடவுள் சக்தி” என்று கூவிக் கொண்டே, தேர்தல் உத்தியாக இந்த நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மகளிருக்கு 33 சதவிகித நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதி இடஒதுக்கீடு சமூகநீதி பிற்படுத்தப்பட்ட சமூகப் பெண்களுக்கு வழங்கிய சமூகநீதி இல்லாத ஒருசட்டம், வெறும் “மாயமான் வேட்டையாகவும், பயனில்லாத கானல் நீர் போன்றும் சட்டம் நிறைவேறியது; ஆனால், அதன் அமல் எத்தனை ஆண்டுகள் கழித்து நடைமுறைக்கு வரும் என்பது உறுதியாக கூற முடியாது.*



*காரணம் (1) பொதுக் கணக்கெடுப்பு (Census) முடிய வேண்டுமாம்.*

*(2) தொகுதி மறுவரையறை முடிய வேண்டுமாம்.*

*என்னே மோசடி! எவ்வளவு ஏமாற்று வித்தை!!*

*இதையெல்லாம் அனைத்திந்திய மகளிரும் உணர்ந்துள்ளதால் மீண்டும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சியை மோடி ஆட்சியை வரவிடாமல் செய்து, ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்து அந்த ஆட்சி வந்தவுடன், அந்த இரண்டு நிபந்தனைகளை விலக்கி விட்டு உடனடியாக மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை எழுந்து நடமாடச் செய்வோம் என்ற உறுதியை சென்னையில் நமது முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் விழைவுப்படியும், ஆணைப்படியும், தி.மு.க. வின் மகளிர் அணி பொறுப்பாளர், துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர், பகுத்தறிவுக் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்த சென்னை மகளிர் உரிமை மாநாடு வரலாறு படைத்துள்ளது!*

**சென்னையில் மகளிர் உரிமை மாநாடு ஏற்பாடு பாராட்டத்தக்கது!**

*இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் மகளிர் உரிமைப் போராளிகளான மகளிர் அணி தலைவர்களை அழைத்து, அதில் முழங்க வைத்தது ஒரு புதிய வெளிச்சத்தை, கூடுதல் நம்பிக்கையை அனைத்து மக்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது!*

*புதிய விடியலுக்கான வெள்ளி முளைக்க வேண்டுமானால், அது மகளிரால் மட்டுமே முடியும் என்பதை உலகுக்கு உணர்த்தி விட்டார்கள்.*

*காங்கிரஸ் பேரியக்கத்தின் சீரிய தலைவர் திருமதி சோனியா அம்மையார் இவர் பிரதமர் பதவியை மறுத்த தியாகச் செம்மல் மற்றும் காஷ்மீர் மேனாள் முதலமைச்சர் மெகபூபா, அகில இந்திய காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் பிரியங்கா, மராத்திய தேசிய வாத கட்சி எம்.பி. சுப்பிரியா சுலே, பீகாரில் இருந்து லெஷிசிங், டில்லி சட்டப் பேரவைத் துணைத் தலைவர் ராக்கிபிட்லன், உத்தரப்பிரதேசம் மேனாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவின் இணையர் டிம்பிள் யாதவ், சமாஜ்வாதி கட்சியின் மகளிரணி தேசியத் தலைவர் ஜூஹி சிங், மம்தாவின் பிரதிநிதியாக சுஷ்மிதா தேவ், இடதுசாரி இயக்கங்கள் சார்பில் சுபாஷினி அலி, ஆனி ராஜா உள்பட பலரும் கலந்து கொண்டு பெரியார் மண்ணில் கருத்தாழத்துடன் சூளுரை செய்தனர்!*

**தந்தை பெரியாரின் சிந்தனையை பெருமையுடன் பேசிய பிரியங்கா காந்தி!**

*பெரியார் தம் தொண்டறமும் முன்னோட்டமும் எப்படி ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் உரிமைக் குரலுக்கு அடி எடுத்து உணரச் செய்தது. “பெண் ஏன் அடிமையானாள்” என்று கேட்டவர் தந்தை பெரியார் என்று பிரியங்கா முழங்கியதைக் கேட்டு நெஞ்சம் பூரிக்கிறது.*

*பிரியங்கா காந்தி அதனை முக்கியமாகக் குறிப்பிட்டது வரவேற்கத்தக்கது.*

*பெரியார் ஒரு சமுதாய விஞ்ஞானி, ஓர் போராயுதம் என்பதை பிரகடனப்படுத்திக் கொண்டு சரியான நேரத்தில், சரியான ஆயுதத்தை எறிந்து களமாட அழைப்பு விடுத்துள்ளது ‘இந்தியா’ கூட்டணி என்பதை கண்டு உவகையுடன் பாராட்டி மகிழ்கிறோம்.*

**இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?**

*இதற்குக் காரணமான ‘திராவிட மாடல்’ முதல் அமைச்சர் அவர்களையும், கவிஞர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களையும் தி.மு.க. மகளிரணி உடன் பிறப்புகளையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.*

*‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?’ என்று புறநானூற்று மகளிர் போல புறப்பட போர்ச் சங்கு ஊதி விட்ட மகளிரே! உங்களுக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!*

*களமாட வந்துள்ள நீங்கள் 2024 தேர்தலில் வெற்றி வாகை சூடிட ஆயத்தமாகி விட்ட அறைகூவல் நிச்சயம் வெற்றிக் கனியைப் பறிக்கும். காரணம் நீங்கள் பெரியார் என்ற சரியான ஆயுதத்தைக் கையில் எடுத்து விட்டீர்கள்!*

*நம் முதலமைச்சர் அவர்களும் அதற்கு வழி காட்டும் நெறியாளராக இன்று இருப்பது, வெற்றியை நிச்சயம் உறுதி செய்யும் வெற்றி இந்தியா கூட்டணிக்கே!*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.*